**IN THE COURT OF DISTRICT MUNSIF, GUDIYATTAM, VELLORE DISTRICT.**

**OS. No. 225/2015**

| | | | |
|---|---|---|---|
| | | DEPOSITION OF WITNESS | PW.1 |
| NAME | காமராஜ் | TALUK | |
| FATHER NAME | | RELIGION | |
| AGE | | OCCUPATION | |
| VILLAGE | | | |

Solemnly affirmed in accordance with the provisions Act of 1873 on the day of 22.01.2026.

**2ஆம் பிரதிவாதி தரப்பில் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டதன் பேரில் குறுக்கு விசாரணை :-**

1. நான் ஆந்திராவில் வசித்து வருகிறேன் என்றால் சரிதான். பிறந்ததில் இருந்து அங்கு உள்ளேனா என்றால் ஆமாம். கருணாகரன் யார் என்றால் எனது மாமா. சம்மந்தம் எனது அப்பா. அவரும் ஆந்திராவில் தான் இருந்தார் என்றால் சரிதான். கருணாகரனுக்கும் எங்களுக்கும் சுமுகமான உறவு உள்ளதா என்றால் உள்ளது.

2. தட்சிணாமூர்த்தி மற்றும் கோவிந்தராஜ் நிலத்தை அபகரித்து சுவாதீனத்தை தர மறுப்பதால் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். சொத்து ஆதியில் சம்பூரணம்மாளுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். சொத்து ஆதியில் சுந்தரம்மாளுக்கு தான் பாத்தியப்பட்டது என்றால் சரிதான். 25.08.1972-ல் ஏற்பட்ட பாகப்பிரிவினையில் தாவா சொத்தானது சி அட்டவணை சொத்தாக சுந்தரம்மாளுக்கு பாத்தியப்பட்டது என்றால் எனக்கு தெரியாது.

3. சுந்தரம்மாளுக்கு எத்தனை பெண் பிள்ளைகள் என்று தெரியாது. சுந்தரம்மாளும் அவரது பெண் பிள்ளைகளும் 1981-ல் பாகம் பிரித்துக்கொண்டார்கள் என்றால் எனக்கு தெரியாது. 25.07.1981-ல் நடந்த பாகப்பிரிவினையில் சம்பூரணம்மாளுக்கு தாவா சொத்து வந்தது என்றால் சரிதான். ஆஜராகியுள்ளவர் பிரதிவாதி கோவிந்தராஜ் என்றால் சரிதான். தட்சிணாமூர்த்தியின் அப்பா பெயர் என்னவென்றால் கோவிந்த கவுண்டர்.

4. சம்பூரணம்மாள் தட்சிணாமூர்த்தியின் அப்பாவிற்கு 21.04.1984-ல் தாவா சொத்தை விற்றுவிட்டார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

1984–ல் சம்பூரணம்மாள் தான் கிரயப்பணத்தை முழுவதும் பெற்றுக்கொண்டு கிரய ஒப்பந்தத்தை மட்டும் எழுதிகொடுத்தார் என்றால் ஆமாம் கிரய ஒப்பந்தம் உள்ளது.

5. அதன்பிறகு 21.03.1986 மற்றும் 24.03.1986 ஆகிய தேதிகளில் கிரயப்பத்திரம் எழுதி கொடுத்தார் என்றால் ஆமாம். கிரயப்பத்திரத்தின் அடிப்படையில் கிரயம் பெற்றவர்கள் சொத்தை அனுபவித்து வந்தார்கள் என்றால் நாங்கள் தான் அனுபவித்து வந்தோம். நாங்கள் அனுபவிக்கவில்லை என்றால் கோவிந்தசாமி தான் அனுபவித்து வந்தார் என்றால் சரியல்ல. நான் பிறந்து வளர்ந்தது இந்த ஊர் இல்லை என்றாலும் அதனால் நாங்கள் சொத்தை அனுபவித்து வரவில்லை என்றால் சரியல்ல நாங்கள் தான் பயிர் செய்கிறோம்.

6. கோவிந்தசாமி கவுண்டர் 29.11.2004–ல் தாவா சொத்தை பொறுத்து தட்சிணாமூர்த்திக்கு தான செட்டில்மெண்ட் எழுதிவைத்து சுவாதீனத்தையும் ஒப்படைத்துவிட்டார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அவர்அவரது மனைவி கனகம்மாள் பெயருக்கு 21.06.2007–ல் தான செட்டில்மெண்ட் எழுதிவைத்து சுவாதீனத்தையும் ஒப்படைத்துவிட்டார் என்றால் சரிதான், சுவாதீனத்தில் நாங்கள் தான் உள்ளோம்.

7. அதன்பிறகு 20.04.2009–ல் கனகம்மாள் பெயருக்கு எழுதிகொடுத்த செட்டில்மெண்ட் ஆவணத்தை ரத்து செய்துவிட்டார் என்றால் சரிதான். தட்சிணாமூர்த்தி 31.12.2013–ல் கோதண்டன் பெயருக்கு ஒரு அடமானபத்திரம் எழுதி கொடுத்தார் என்றால் சரிதான். மேற்படி விவரங்கள் பற்றி 1986–ல் இருந்து எனது அப்பாக்கு தெரியுமா என்றால் எனது அப்பாவுக்கு தெரியுமா என்று எனக்கு தெரியாது.

8. மேற்படி விவரங்கள் எனது அப்பா இறந்தபிறகு எனக்கு தெரியும் என்றால் 2015–ல் இருந்து தெரியும். அதன்பிறகு 1ஆம் பிரதிவாதி 2ஆம் பிரதிவாதிக்கு 07.05.2015–ல் தாவா சொத்துக்களை விற்றுவிட்டார் என்றால் சரிதான். தாவாவில் இரண்டு அட்டவணை சொத்துக்களை காட்டியுள்ளோம். சொத்துக்கள் உப்பறப்பள்ளியில் உள்ளது. அவை விவசாய நிலங்கள் என்றால் சரிதான்.

9. அ அட்டவணை மற்றும் ஆ அட்டவணை சொத்துக்கள் சமமாக உள்ளது என்றால் இடையில் வரப்பு உள்ளது. சொத்துக்களுக்கு இடையே வரப்பு இல்லை என்றாலும் சமமாக உள்ளது என்றாலும் சரியல்ல வரப்பு உள்ளது. அ அட்டவணை மற்றும் ஆ அட்டவணை சொத்துக்களுக்கு இடையே வரப்பு உள்ளது என்பதற்கு ஆவணம் ஏதாவது தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

10. முதலில் வழக்கை தாக்கல் செய்தபோது தட்சிணாமூர்த்தி மீது மட்டும் தான் போட்டோம் என்றால் சரிதான். அதன்பிறகு 3 வருடம் கழித்து தான் கோவிந்தராஜை தரப்பினராக சேர்த்தோம் என்றால் சரிதான். 2015–ல் தட்சிணாமூர்த்தியிடம் இருந்து கோவிந்தராஜ் சொத்து வாங்கியது பற்றி எப்போது தெரியும் என்றால் அப்போதே தெரியும். அதன்பிறகு தான் வழக்கு போட்டோம் என்றால் சரிதான்.

11. கோவிந்தராஜை ஏமாற்ற வேண்டும் என்ற எண்ணத்தில் அவர் ஊனமுற்றவர் என்பதால் அவரை தரப்பினராக சேர்க்காமல் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. 1ஆம் பிரதிவாதி தட்சிணாமூர்த்தி எனக்கு என்ன உறவு என்றால் எனது சித்தப்பா. அவர் இன்று நீதிமன்றம் வந்துள்ளாரா என்றால் வரவில்லை. அவருக்கும் எங்களுக்கும் தகராறு எதுவும் இல்லை என்றால் சரிதான். தட்சிணாமூர்த்தி மீனூரில் இருக்கிறார்.

12. உடல் ஊனமுற்ற 2ஆம் பிரதிவாதிக்கு விற்பனை செய்த சொத்தை அபகரிக்க வேண்டி நாங்களும் எனது சித்தப்பா தட்சிணாமூர்த்தியும் சேர்ந்து தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. கோவிந்தராஜ் அவரை தாவா சொத்திலிருந்து வற்புறுத்தி வெளியேற்ற முயற்சி செய்வதாக கருணாகரன் மீது காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால் சரியல்ல.

13. தாவா சொத்திலிருந்து கோவிந்தராஜை நீதிமன்றத்தின் மூலமாக வெளியேற்றும் வரை தொந்தரவு செய்யக்கூடாது என எழுதி வாங்கிக்கொண்டார்கள் என்றால் நாங்கள் யாரும் தொந்தரவு செய்யவில்லை. பட்டா, சிட்டா ஆகியவை கோவிந்தராஜ் பெயரில் உள்ளது என்றால் சரியல்ல எங்கள் பெயரில் உள்ளது. சொத்து முழுவதும் 2ஆம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்றாலும் நல்ல முறையில் அவர் கிரயம் பெற்றதால் அவருக்கு தான் உரிமை உள்ளது என்றால் சரியல்ல.

14. இந்த வழக்கை எங்களுக்காக தட்சிணாமூர்த்தி தான் நடத்துகிறார் என்றால் சரிதான். இது பொய்யான வழக்கு என்றாலும் பிரமாண வாக்குமூலத்தில் நான் சொல்லியுள்ள சங்கதிகள் உண்மைக்கு புறம்பானவை என்றாலும் தாவா தள்ளுபடியாக வேண்டும் என்றால் சரியல்ல. எனது தந்தை பெயரில் உள்ள ஆவணங்கள் அனைத்தும் வழக்கிற்காக தயாரிக்கப்பட்டவை என்றாலும் அவை உண்மையான ஆவணங்கள் அல்ல என்றால் சரியல்ல.

15. சம்பூரணம்மாளுக்கு தமிழ் எழுத, படிக்க தெரியாது என்றால் சரிதான். அவர் கையெழுத்து போடுவார். வா.சா.ஆ.1 ஆவணம் சம்பூரணம்மாள் எழுதிகொடுத்த ஆவணம் இல்லை என்றாலும் வழக்கிற்காக தயாரிக்கப்பட்ட

ஆவணம் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 ஆவணமும் வழக்கிற்காக தயாரிக்கப்பட்ட ஆவணம் என்றாலும் சம்பூரணம்மாள் எழுதிக்கொடுத்ததல்ல என்றால் சரியல்ல. சம்பூரணம்மாள் எப்போது இறந்தார் என்றால் எனக்கு தெரியாது. நானும் எனது அப்பாவும் ஆந்திராவில் வசித்து வந்தோம் என்றாலும் வேறு நபரை அழைத்து வந்து ஆவணத்தில் தயாரித்துள்ளோம் என்றால் சரியல்ல. நாங்கள் தாக்கல் செய்துள்ள பட்டா புஸ்தகம் கூட முறையற்ற முறையில் தயாரிக்கப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல.

16. நாங்கள் சுவாதீன பரிகாரம் கேட்காமல் இந்த வழக்கை தாக்கல் செய்தது தவறு என்றால் சரியல்ல. 2015–ல் வழக்கு தாக்கல் செய்தபோது தாவா சொத்தின் சுமார் 10 லட்சம் இருக்கும் என்றால் அதுபற்றி தெரியாது. இந்த வழக்கு 2ஆம் பிரதிவாதியை ஏமாற்ற வேண்டி போடப்பட்ட வழக்கு என்றாலும் அதனால் இந்த வழக்கு தள்ளுபடியாக வேண்டும் என்றால் சரியல்ல.

K KARTHICK ASATH Digitally signed by K KARTHICK ASATH

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
குடியாத்தம்.